# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1723 - 2011 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2011.09.09

*1723 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 112 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- தேசிய பொலிசுக் கலைக்கழகம் சட்டமூலம் 2011, ஓகத்து 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அமுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் நடைபெறும் மேல் மாகாண மேல் நீதிமன்றம் (குடியியல் சட்டங்களை நடைமுறைப்படுத்தும்)

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் TMI எம்ப்ரோய்டரி சொலுசியன்ஸ் (தனியார்) நிறுவனத்தை கலைத்தல் விடயத்தில்;*

*வழக்கு இல. HC/சிவில்/36 - 2011 (கம்)*

*TMI எம்ப்ரோய்டரி சொலுசியன்ஸ் (தனியார்) நிறுவனம், இல. 26, சங்கபோ மாவத்தை, பொருப்பனை, இரத்மலானை*

*.................... மனுதாரர்*

மேற்படி பெயரிடப்பட்ட கம்பனி களைப்பது தொடர்பாக மனுதாரர் 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு (குடியியல்) அறிவித்தல் இதன் மூலம் வழங்கப் பட்டுள்ளதுடன் இரத்மலானை, பொருபன, சங்கபோ வீதியில், இல. 26 இல் அமைந்துள்ள TMI எம்ப்ரோய்டரி சொலுசியன்ஸ் (தனியார்) நிறுவனம் இது தொடர்பான மனுவை முன்வைத்துள்ளதுடன் அது குறித்து விசாரணை 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நீதிமன்றம் முன் நடைபெற இருப்பதுடன் இது குறித்து ஆர்வம் செலுத்தும் மேற்படி நிறுவனத்தின் ஏதேனும் கடன்காரர்கள் அது குறித்து விருப்பத்தை அல்லது எதிர்ப்பை தெரிவிப்பதற்காக மேற்படி மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் போது அந்நபர் தனிப்பட்ட ரீதியில் அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி ஊடாக ஆஜராகுவதற்கும், கீழ்காணும் விலாசத்தில் கையொப்பமிடும் நபருக்கு குறித்த கட்டணங்களை செலுத்தி மனுவின் பிரதியொன்றை எந்த கடன்காரருக்கோ அல்லது நபருக்கோ பெற முடியும் :-

எச். சந்திரகுமார் டி சில்வா,
சட்டத்தரணி,
இல. 5ஏ, 2 ஆம் மாடி, சம்னர் பிளேஸ்,
கொழும்பு 08,
தொலைபேசி /தொலைநகல் : 0114618940.

**குறிப்பு**.- மேற்படி மனு விசாரணைக்கு எடுக்கும் போது நீதிமன்றத்தில் சமுகமளிக்க விரும்பும் ஏதேனும் நபருக்கு மனுவின் பிரதியொன்று கையளிப்பதுடன் அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதற்கு குறித்த நபர் அது குறித்து எச். சந்திரகுமார் டி சில்வா சட்டத்தரணியிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் செய்திருக்க வேண்டும். அந்த அறிவித்தலில் நபரின் பெயர், விலாசம் அல்லது நிறுவனம் எனின் அதன் விலாசமும் பெயரும் நிறுவனம் சார்பாக அல்லது நபர் சார்பாக கையொப்பமிட்டு குறித்த வேண்டுகோளை செய்யவேண்டியதுடன் அல்லது மேற்படி நபர்கள் சார்பாக அல்லது அவர்களது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள் (இருப்பின்) அவர்களுக்கு வழங்கப்படும் அல்லது தபால் மூலம் அனுப்பப்படும். தபால் மூலம் அனுப்பப்படுமாயின் போதிய காலம் தேவையுள்ளபடியால் அவை தொடர்பான கோரிக்கைகள் 2011, ஒற்றோபர் 27 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு முதல் வழங்கப்படல் வேண்டும்.

எச். சந்திரகுமார் டி சில்வா,
சட்டத்தரணி.

9-237

---

## இலங்கை தொழில்வாண்மையிலான சமூகப்பணியாளர்களின் ஒன்றியத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஜானக பண்டார ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''இலங்கை தொழில்வாண்மையிலான சமூகப்பணியாளர்களின் ஒன்றியத்தினைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த இலங்கை தொழில்வாண்மையிலான சமூகப்பணியாளர்களின் ஒன்றியத்தினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. தொழில்வாண்மையிலான சமூகப்பணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேன்மைப்படுத்தல் ;
2. இச்சேவைப் பயனாளிகளை இணைத்து அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தல் ;
3. தொழில்வாண்மையிலான சமூகப்பணிக் கல்வி இல்லாது சமூகப்பணி தொடர்பான பணிகளில் உள்ளவர்களுக்கு சமூகப்பணிப் பயிற்சியை வழங்குதல்.

பிறவும்.

ஜானக பண்டார,
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

9-317